25th January 1961]

THE HON. SRI V. RAMAIAH : ஜனங்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டம் அரசாங்கத்திற்குத் தெரியும். ஆனால் ஒரு உத்தரவைப் போட்டு, உடனடியாக மீட்டர்களைப் பொருத்தவேண்டுமென்று சொன்னால், அதனால் பல கஷ்டங்கள் மீட்டர் கிடைக்காததினால் ஏற்படுகின்றன. அதனால்தான் டாக்ஸி மீட்டரோ, இல்லாவிட்டால் மைலோ மீட்டரோ இரண்டில் ஒன்று பொருத்தப்பட்டு இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இதனால் அதிகமாகத் தொந்தரவு இருக்காது. உடனடியாக உத்தரவு போட்டு அதை அமலுக்குக் கொண்டுவருவதிலுள்ள கஷ்டங்களைப் பரிசிலனை செய்துதான் புது முடிவுகளை எடுக்கிறோம்.

SRI S. PAKKIRISAMI PILLAI : ஆட்டோ ரிக்ஷா, பேபி டாக்ஸி மீட்டர்கள் கிடைக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. டாக்ஸி மீட்டர்கள் கிடைப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கிறது என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI V. RAMAIAH: சென்னை நகரத்தில் ஓடக் கூடிய வண்டிகளுக்கு எல்லாம் டாக்ஸி மீட்டர் இருக்கிறது.

SRI A. VEDARATHNAM : மீட்டர்கள் வியாபாரம் செய்கிற வியாபாரிகள் மீட்டர்கள் செலவாகவில்லை என்று புகார் கூறுகிறார்களே, அது சரியா?

THE HON. SRI V. RAMAIAH: என்னிடத்தில் இருக்கக்கூடிய தகவல் என்னவென்றால், சென்ற வருஷமும் அதற்கு முந்திய வருஷத்திலும் மீட்டர்களைப் பொருத்தவேண்டுமென்று உத்தரவு போட்ட உடனே, அவர்கள் முன் சொல்லிய விலையைக் காட்டிலும் அதிகமாகச் சொன்னார்கள். அதனால் சிக்கல்கள் ஏற்பட்டன. இப்பொழுது அந்தக் கஷ்டம் இருக்காது.

English

* 184 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN :
SRI P. S. CHINNADURAI :
SRI A. VEDARATHNAM :
SRI M. P. SARATHI :
} கனம் நிதி

அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஐந்தாவது வகுப்பிலிருந்து ஆங்கில போதனை ஆரம்பிக்க உபாத்தியாயர்களை நியமிப்பதின் காரணமாக பாதிக்கப்படும் உபாத்தியாயர்கள் எவ்வளவுபேர், ஜில்லாவாரியாக?

(இ) ஸ்தல ஸ்தாபன பாடசாலைகள், தனியார் பாடசாலைகள், சர்க்கார் பாடசாலைகள் முதலியவைகளில் எவ்வளவு பேர்?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) & (இ) A statement [a] is placed on the table of the House. All the teachers ousted were from Elementary schools under private agencies.

[a] Printed as Appendix III on page 582 infra.

[25th January 1961

SRI S. M. ANNAMALAI: மேஜைமீது வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் எய்டெட் பள்ளிக்கூடங்களில் வேலை செய்து கொண்டிருக்கும் ஆசிரியர்களைப்பற்றித்தான் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கேள்வியிலுள்ள பி-பிரிவுக்குப் பதில் சொல்லவில்லை. பி-பிரிவுக்குப் பதில் சொல்ல முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: நான் சொன்ன பதிலைக் கவனித்திருந்தால் விடையைத் தெரிந்துகொண்டிருப்பார்கள். பிரைவேட் பள்ளிகளிலிருந்துதான் அவர்கள் வேலையிலிருந்து விலக்கப்பட்டார்கள். மற்ற பள்ளிகளிலிருந்து விலக்கப்படவில்லை.

* 185 Q.—**SRI K. R. NALLASIVAM**: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆரம்பப் பள்ளிகளில் தற்போது ஆங்கிலம் ஐந்தாம் வகுப்புகளுக்கு வைக்கப்பட்டிருக்கிறதா?

(இ) வரும் வருடம் நான்காவது வகுப்பிலேயே ஆங்கிலத்தை வைக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) Yes, Sir.

(இ) No final decision has been taken in the matter yet.

SRI K. R. NALLASIVAM: வெளியிலே 4-வது வகுப்பிலிருந்து ஆரம்பிப்பதைப் பற்றி அமைச்சர் பேசிவருகிறார்கள். முன்பு நமது போதனாமொழி ஆங்கிலமாக இருந்தது. இப்பொழுது அப்படியில்லாத நிலைமையை உண்டுபண்ணுகிறோம். அப்படியிருக்கும்பொழுது 5-வது வகுப்பிலிருந்து 6 வருடங்கள் கற்றுக் கொண்டால் போதாதா? ஏன் நான்காவது வகுப்பிலிருந்து ஆரம்பிக்கவேண்டும்?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஆங்கிலம் போதனாமொழியாக இல்லாத காரணத்தினால்தான், அதை நன்றாகக் கற்றுக் கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறது.

SRI K. VINAYAKAM: As regards the introduction of the teaching of English from IV standard, may I know whether there is any conflict between the Minister in charge of Education and the Director of Public Instruction? For, I read in the papers that the Director of Public Instruction had announced that English would be introduced in the IV standard from the next academic year, but the Minister had categorically contradicted it the very next day. So, may I know whether the consolidated opinion of the Minister and the head of the Department will be formulated on the subject and announced?

THE HON. SRI C. SUBRAMANIAM: There could be many points of view as far as this matter is concerned. I have already stated that the matter of introduction of the teaching of English from the IV standard is under consideration and no final decision has yet been taken on the same.